# 27 பகவத்கீதையும் தம்மபதமும்

இந்து மதத்தில் முக்கிய நூலாகக் கொள்ளப்படும் பகவத்கீதை, காலத்தால் பௌத்தத்துக்கு முந்தியதாகும். பௌத்தம் இந்தியச் சூழலில் தோன்றிய காரணத்தினால், சைவசமயத்தோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டு காணப்படுகின்றது. குறிப்பாக, சைவசமயத்தில் குறிப்பிடப்படும் பல கருத்துக்களை தம்மபதம் எனும் நூலிலும் காணக்கிடக்கின்றது. பகவத்கீதை, கிருஷ்ண பகவானால் அருளிச்செய்யப்பட்ட நூலாகும். தம்மபதம் எனும் பௌத்த நூல், புத்தபகவானால் அருளிச் செய்யப்பட்டதாகும். பகவத்கீதையில் தர்மத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், தம்மபதமும் தர்மத்திற்கே முக்கியத்துவம் அளிக்கின்றது.

மனிதனுக்கு ஏற்படும் துக்கந்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்ற குறிப்பு, பகவத்கீதையில் வருகின்றது. பகவத்கீதை,

- ★ துக்கம்
- ★ துக்கத்திற்கான காரணம்
- ★ துக்கநிவாரணம்
- ★ துக்க நிவாரண மார்க்கம் என்று விளக்குகின்றது.

இதனையே புத்தரின் வாசகங்களாக காணப்படும் தம்மபதம் நான்கு வாய்மைகள் எனக் குறிப்பிடுகின்றது.

இந்து மதத்தில் விஷ்ணு பகவான் தசாவதார கோட்பாடு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. பௌத்தத்தில் பௌராணிகர், கௌதம புத்தரை விஷ்ணுவின் அவதாரமாகவே கருதுகின்றனர். இன்றும் கூட பௌத்தர்கள் ''விஷ்ணு தெய்யோ'' என விஷ்ணுவை வழிபடுவதைக் காண்கின்றோம்.

## பாடச் சுருக்கம்

பகவத்கீதை, தம்மபதம் ஆகிய நூல்கள் ஒன்றுபட்ட பல கருத்துக்களைக் கொண்டுள்ளன.

பகவத்கீதை குறிப்பிடும் துக்கம் பற்றிய விடயங்களை, தம்மபதம் நான்கு வாய்மைகள் எனக் குறிப்பிடுகின்றது.

இன்றும் பௌத்த மதத்தினர், விஷ்ணு பகவானை வழிபடுவதனைக் காணமுடிகின்றது.

## பயிற்சிகள்

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. தம்மபதம் யாரால் அருளிச் செய்யப்பட்ட நூலாகும்?
2. பகவத்கீதை, தம்மபதம் என்பவற்றுள் காலத்தால் முந்திய நூல் எது?
3. மனிதனது அனைத்துப் பிரச்சினைகளுக்குமான காரணம் எதுவென பகவத்கீதை குறிப்பிடுகின்றது?
4. தம்மபதம் குறிப்பிடும் நான்கு வாய்மைகளும் எவை?
5. கௌதமபுத்தர் யாருடைய அவதாரமாகக் கொள்ளப்படுகின்றார்?

## செயற்பாடு

பகவத் கீதையில் பின்வருவன தொடர்பாகக் கூறப்பட்ட விடயங்களைத் தொகுத்து எழுதுக.

★ துக்கம்
★ துக்கத்திற்கான காரணம்
★ துக்க நிவாரணம்
★ துக்க நிவாரண மார்க்கம்